

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

(8) ஆனந்த பரவசம்

(கலி நிலைத்துறை)



# திருச்சிற்றம்பலம்



விச்சுக் கேடு பொய்க்கு ஆகாது
என்று இங்கு எனை வைத்தாய்
இச்சைக்கு ஆனார் எல்லாரும்'
வந்து உன்தாள் சேர்ந்தார்
அச்சத்தாலே ஆழ்ந்திடு.
கின்றேன் ஆரூர் எம்
பிச்சைத் தேவா என்நான்
செய்கேன் பேசாயே. 81





பேசப்பட்டேன் நின் அடி
யாரில் திருநீறே
பூசப்பட்டேன் பூதலரால்
உன் அடியான் என்று
ஏசப்பட்டேன் இனிப்படு
28 கின்றது அமையாதால்
ஆசைப்பட்டேன் ஆட்பட்
டேன் உன் அடியேனே.





அடியேன் அல்லேன் கொல்லோ தான் எனை
ஆட்கொண்டிலை கொல்லோ
அடியார் ஆனார் எல்லாரும்
வந்து உன்தாள் சேர்ந்தார்
செடிசேர் உடலம் இது நீக்கமாட்டேன்
எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக்
காணுமாறு காணேனே.





காணுமாறு காணேன் உன்னை
அந்நாள் கண்டேனும்
பாணே பேசி என் தன்னைப்
படுத்தது என்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆர் அமுதே
அத்தா செத்தே போயினேன்
ஏண் நாண் இல்லா நாயினேன்
என்கொண்டு எழுகேன் எம்மானே. 84



மான்நேர் நோக்கி உமையாள் பங்கா
மறைஈறு அறியா மறையோனே
தேனேஅமுதே சிந்தைக்கு அரியாய்
சிறியேன் பிழை பொறுக்கும்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன்
சிவமாநகர் குறுகப்
போனார் அடியார் யானும் பொய்யும்
புறமே போந்தோமே.







புறமே போந்தோம் பொய்யும்
யானும் மெய் அன்பு
பெறவே வல்லேன் அல்லா
வண்ணம் பெற்றேன் யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்று ஒன்று அறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே
நின்தாள் சேர்ந்தாரே.

86





தாராய் உடையாய் அடியேற்கு
உன்தாள் இணை அன்பு
போரா உலகம் புக்கார் அடியார்
புறமே போந்தேன் யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்து
இங்குஉன் தாள்இணை அன்புக்கு
ஆரா அடியேன் அயலே
மயல் கொண்டு அழுகேனே





அழுகேன் நின்பால் அன்பாம்
மனமாய் அழல் சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார்
பொன்னார் கழல் கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா
ரோடும் தொடராதே
பழுதே பிறந்தேன் என் கொண்டு
உன்னைப் பணிகேனே.

88





பணிவார் பிணி தீர்த்துஅருளிப்
பழைய அடியார்க்கு உன்
அணியார் பாதம் கொடுத்தி
அதுவும் அரிது என்றால்
திணியார் மூங்கில் அனையேன்
வினையைப் பொடி ஆக்கித்
தணியார் பாதம் வந்து ஒல்லை
தாராய் பொய்தீர் மெய்யானே.





யானே பொய் என்நெஞ்சும்
பொய்என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனை வந்து உறுமாறே.



ஸ்ரீ மாணிக்கவாசகர்